# பொதுத்தமிழ்

1. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி எனக் குறிக்கப் பெறுபவர் யார்?

அ) ஆண்டாள்

ஆ) புனிதவதியார்

இ) மங்கையர்க்கரசியார்

ஈ) ஔவையார்

விடை அ

2. எதிர்சொல் தருக. உயர்வு

அ) பெயர்வு

ஆ) அயர்வு

இ) வாழ்வு

ஈ) தாழ்வு

விடை ஈ

3. பிரித்து எழுதுக. புத்தேளுலகு

அ) புத்தே+உலகு

ஆ) புத்தேள்+உலகு

அறிவுக்கடல் பதிப்பகம்

இ) புதிய+ உலகு

ஈ) புத்தே+யுலகு

விடை ஆ

4. ஒரு மொழிக்குரிய ரா என்னும் ஓரெழுத்து பொருள் யாது?

அ) பகல்

ஆ) மாலை

இ) இராத்திரி

ஈ) காலை

விடை இ

5. நெஞ்சாற்றுப்படை என்னும் பெருமைக்குரிய நூல் எது?

அ) முல்லைப்பாட்டு

ஆ) சிலப்பதிகாரம்

இ) சிந்தாமணி

ஈ) குறிஞ்சிப்பாட்டு

விடை அ

6. செய்வினைத் தொடரைக் எழுதுக

அ) மாணவர்களால் வகுப்பு தூய்மை செய்யப்பட்டது

ஆ) மாணவர்கள் வகுப்பைத் தூய்மை செய்தனர்

விடை ஆ

7. பாடியது என்ற சொல்லிற்கு வேறொரு சொல்லை காண்க?

அ) பாடு

ஆ) பாடி

இ) பாடிய

ஈ) பாடுதல்

விடை அ

8. பட்டியல் 1-இல் உள்ள நூல்களை பட்டியல் 2-இல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி,கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| நூல் | நூலாசிரியர் |

அ) ஏரெழுபது – 1. கவிக்கோ அப்துல்ரகுமான்

ஆ) இரட்சணியக்குறள் – 2. தாராபாரதி

அறிவுகடல் பதிப்பகம்

இ) பால்வீதி - 3. கம்பர்

ஈ) புதிய விடியல்கள் – 4. கிருட்டிணப்பிள்ளை

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 2 | 1 | 4 | 3 |
| ஆ) | 3 | 4 | 1 | 2 |
| இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) | 3 | 1 | 4 | 2 |

விடை ஆ

9. தாயைக்கண்டசேய் போல – இவ்வுவமையால் விளக்கப் பெறும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க.

அ) வியப்பு

ஆ) அதிர்ச்சி

இ) மகிழ்ச்சி

ஈ) நாணயம்

விடை இ

10. இடன் – என்பதன் இலக்கணக்குறிப்பு தருக?

அ) இடைப்போலி

அறிவுக்கடல் பதிப்பகம்

ஆ) வினைச்சொல்

இ) முதற்போலி

ஈ) ஈற்றுப்போலி

விடை ஈ

11. தவறான சொல்லைக் கண்டறிக

அ) உமறுப்புலவர்

ஆ) அடியார்க்கு நல்லார்

இ) வள்ளுவர்

ஈ) கம்பர்

விடை ஆ

12. மரபுப்பிழைகள் அற்ற தொடரைக் எழுதுக?

அ) முருங்கைக்கீரை

ஆ) முருங்கைத்தழை

இ) முருங்கைமடல்

ஈ) முருங்கை இலை

விடை அ

13. கீழ்க்கண்டவற்றுள் ஒருமை பன்மை பிழைகளை நீக்குக

அறிவுகடல் பதிப்பகம்

அ) தமிழர்கள் தமிழிலக்கியங்களைப் படிக்கின்றான்

ஆ) தமிழர்கள் தமிழிலக்கியங்களைப் படிக்கின்றார்

இ) தமிழர்கள் தமிழிலக்கியங்களைப் படிக்கின்றனர்

ஈ) தமிழன் தமிழிலக்கியங்களைப் படிக்கின்றனர்

விடை இ

14. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க

அ) உவவு,பருதி,வனப்பு,நாள்

ஆ) வனப்பு, நாள், உவவு, பருதி

இ) உவவு,நாள்,பருதி, வனப்பு

ஈ) நாள்,பருதி, உவவு, வனப்பு

விடை இ

15. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு

"கலிங்கத்துப் பரணியை பாடியவர் செயங்கொண்டார்"

அ) பரணிக்கோர் செயங்கொண்டார் – சரியா?

ஆ) கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் யார்?

இ) கலிங்கத்துப்பரணி – பெயர்க்காரணம் தருக?

ஈ) செயங்கொண்டார் எழுதிய நூல் எது?



அறிவுக்கடல் பதிப்பகம்

விடை ஆ

16. வல்லபன் ஆக்கிய சித்திரம் போலும்

வண்மைக் கவிஞர் கனவினைப் போலும்

-இயைபுத் தொடையை தேர்க

அ) போலும் – போலும்

ஆ) வல்லவன் – வண்மைக்

இ) கவிஞர் – கனவினைப்

ஈ) ஆக்கிய – கவிஞர்

விடை அ

17. Fiction என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க

அ) ஆடை அமைப்பு

ஆ) கட்டுரை

இ) உராய்வு

ஈ) புனைகதை

விடை ஈ

18. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குக?

அ) சமயக்குரவர் திருஞானசம்பந்தர் குறிப்பிடத் தக்கவர் நால்வருள்

ஆ) சமயக்குரவர் நால்வருள் குறிப்பிடத்தக்கவர் திருஞான சம்பந்தர்

இ) நால்வருள் குறிப்பிடத்தக்கவர் சமயக் குரவர் திருஞானசம்பந்தர்

ஈ) திருஞானசம்பந்தர் குறிப்பிடத்தக்கவர் நால்வருள் சமயக்குரவர்

விடை ஆ

19. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

வளம் வலம்

அ) நேர்கோடு - உயர்தல்

ஆ) ஆணை - செழுமை

இ) தானாக - நன்மை

ஈ) செல்வம் – வலிமை

விடை ஈ

20. “அவன்,அவன் மொழியை உயர்த்தினால் தான் அவன் நாடு உயரும் என்று பாரதிதாசன் கூறியுள்ளார்” – எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக?

அ) அயற்கூற்று வாக்கியம்

ஆ) வினா வாக்கியம்

இ) கலவை வாக்கியம்

ஈ) எதிர்மறை வாக்கியம்

விடை அ

21. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை தேர்ந்தெடுக்க.

விலை விளை விழை

அ) வாங்கு பழம் பள்ளம்

ஆ) கிரயம் பயன் நட்பு

இ) விற்றல் உண்டாக்கு விரும்பு

ஈ) பொருள் விளைச்சல் புணர்ச்சி

விடை இ

22. அவ்வக்காலம் – என்ற சொல்லை பிரித்து எழுதுக?

அ) அவ்+அவ்+காலம்

ஆ) அ+ அவ் + காலம்

இ) அவ்+வக்+ காலம்

ஈ) அவ்+ அக்+ காலம்

அறிவுக்கடல் பதிப்பகம்

விடை ஆ

23. கை என்பதன் பொருள் யாது?

அ) பூமி

ஆ) குயவன்

இ) தங்கை

ஈ) மலர்

விடை இ

24. கீழ்வருவனவற்றை பொருத்துக

| பட்டியல் 1 | | பட்டியல் 2 |
|---|---|---|
| சொல் | | பொருள் |
| அ) கிரணம் | - | 1. மரம் |
| ஆ) புள் | - | 2. மலர் |
| இ) தரு | - | 3. பறவை |
| ஈ) அலர் | - | 4. ஒளிக்கதிர் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 1 | 2 |
| ஆ) | 3 | 1 | 2 | 4 |

அறிவுகடல் பதிப்பகம்

இ) 4 1 2 3

ஈ) 1 4 3 2

விடை அ

25. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்ந்தெடுக்க?

ஊன் ஊண்

அ) தைலம் - ஊணன்

ஆ) ஊன்று - ஊதுதல்

இ) உடம்பு – உணவு

ஈ) உறுதி – அழுக்கு

விடை இ

26. தமிழ்வேதம் என்று எந்த நூல் அழைக்கப்படுகிறது?

அ) பகவத்கீதை

ஆ) நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

இ) கம்பராமாயணம்

ஈ) பெரியபுராணம்

விடை ஆ

அறிவுக்கடல் பதிப்பகம்

27. பிரித்தெழுதுக. காட்டுவளம்

அ) காடு+அளம்

ஆ) காட்டு+ வளம்

இ) கா+வளம்

ஈ) காடு+ வளம்

விடை ஈ

28. எதிர்ச்சொல்லைத் தேர்ந்தெடுக்க – இசை

அ) வசை

ஆ) புகழ்

இ) அறிவு

ஈ) மேன்மை

விடை அ

29. பொருந்தாச் சொல்லைக் கண்டுபிடி

அ) வெண்கரடி

ஆ) நாய்

இ) வரிப்புலி

ஈ) சிங்கம்

அறிவுக்கடல் பதிப்பகம்

விடை ஆ

30. கீழ்க்கண்டவற்றில் ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக?

ஓனரிடம் அக்ரீமெண்டு செய்தான்

அ) உரிமையாளரிடம் ஒப்பந்தம் செய்தான்

ஆ) சொந்தக்காரரிடம் ஒப்பந்தம் செய்தான்

இ) உரிமையாளரிடம் சம்மதம் செய்தான்

ஈ) ஓனரிடம் உரிமை செய்தான்

விடை அ

31. சொற்களை அகரவரிசைப்படி சீர்செய்க

அ) மாடம்,வீடு,சிற்பம், பளிங்கு

ஆ) சிற்பம், பளிங்கு, மாடம், வீடு

இ) சிற்பம்,பளிங்கு,வீடு, மாடம்

ஈ) பளிங்கு,சிற்பம்,மாடம்,வீடு

விடை ஆ

32. சொற்களை முறைப்படி அமைந்துள்ள சரியான வாக்கியத்தைக் கண்டுபிடி

அ) காட்டைக் கடந்து சென்றான் வெகுதூரம் இராமன்

ஆ) வெகுதூரம் காட்டைக் கடந்து சென்றான் இராமன்

இ) இராமன் காட்டைக் கடந்து வெகுதூரம் சென்றான்

ஈ) இராமன் வெகுதூரம் சென்றான் காட்டைக் கடந்து

விடை இ

33. சந்திப்பிழை இல்லாத தொடரை தேர்ந்தெடுக்க

அ) இது உலகப் புகழ்பெற்றப்படம்

ஆ) இது உலக புகழ்பெற்ற படம்

இ) இது உலகப் புகழ்பெற்ற படம்

ஈ) இது உலக புகழ்ப்பெற்றப்படம்

விடை இ

34. நோற்றான் என்ற வினைமுற்றின் வேர்ச்சொல்லை தருக?

அ) நோற்றல்

ஆ) நோற்ற

இ) நோற்பான்

ஈ) நோல்

விடை ஈ

அறிவுக்கடல் பதிப்பகம்

35. பெயர்ச்சொல்லின் வகையைத் தேர்ந்தெடுக்க
வேலை செய்தவன் கூலி பெறுவான்?

அ) காலப்பெயர்

ஆ) பொருட்பெயர்

இ) வினையாலணையும் பெயர்

ஈ) இடப்பெயர்

விடை இ

36. சரியான இலக்கணக் குறிப்பிற்குரிய சொல்லைத் தேர்ந்தெடுக்கவும் உவமைத்தொகை

அ) வாய்பவளம்

ஆ) பவளமும், வாயும்

இ)பவளவாய்

ஈ) வாய் போன்ற பவளம்

விடை இ

37. குடகு மலையில் தோன்றிய காவிரி தமிழகத்தில் பாய்ந்து கடலில் சென்று கலக்கிறது. இது எவ்வகை வாக்கியம்?

அ) தொடர்நிலை வாக்கியம்

ஆ) தனிநிலை வாக்கியம்

அறிவுக்கடல் பதிப்பகம்

இ) உணர்ச்சி வாக்கியம்

ஈ) கலவை வாக்கியம்

விடை ஈ

38. ஒலி வேறுபாடறிந்து எது சரியான தொடர் என ஆராய்க.

அழி – அளி

அ) கர்ணன் குந்திக்கு வரம் அளித்தான்

ஆ) கர்ணன் குந்திக்கு வரம் அழித்தான்

இ) இராமன் இராவணனை அளித்தான்

ஈ) இராமன் இராவணனை அழித்தினான்

விடை அ

39. வேர்ச்சொல்லைக் கொண்டு வினைமுற்று, வினையெச்சம், விணையாலணையும் பெயர், தொழிற்பெயர் உருவாக்கல்: ‘செல்’

அ) சென்று, சென்றான், சென்றன, சென்றார்கள்

ஆ) சென்றான், சென்று,சென்றவர், செல்லுதல்

இ) சென்றான், சென்றாள், சென்றவர், சென்றது

ஈ) சென்றன,சென்றவள், செல்லுதல், சென்றாள்

விடை ஆ

40. உவமையைப் பொருளுடன் பொருத்துக

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப் போல

அ) இயலாமை

ஆ) ஒழுக்கமின்மை

இ) பயனின்மை

ஈ) பேராசை

விடை அ

41. பொருத்துக

புகழ்பெற்ற நூல் நூலாசிரியர்

அ) திருக்காவலூர்க் கலம்பகம் – 1. முடியரசன்

ஆ) காவியப்பாவை - 2. பாரதிதாசன்

இ) குறிஞ்சித்திட்டு – 3. வீரமாமுனிவர்

ஈ) சகலகலா வல்லி மலை – 4. குமரகுருபரர்

அ ஆ இ ஈ

அ) 3 2 4 1

ஆ) 3 4 1 2

இ) 4 3 2 1

ஈ) 3 1 2 4

விடை ஈ

42. பொருத்துக

அ) முகை - 1. பாக்குமரம்

ஆ) பகழி – 2. மொட்டு

இ) பூகம் – 3.தேன்

ஈ) நறவம் – 4. அம்பு

அ ஆ இ ஈ

அ) 2 4 1 3

ஆ) 3 4 1 2

இ) 2 1 4 3

ஈ) 4 3 2 1

விடை அ

43. வேர்ச்சொல்லைக் கொண்டு வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் அறிக. ‘வா’

அ) வந்தான், வந்தவர், வருவார், வருதல்

அறிவுக்கடல் பதிப்பகம்

ஆ) வந்தான், வந்து, வருபவன், வருதல்

இ) வாழ்தல், வந்தான், வருபவன், வந்து

ஈ) வாரும், வந்தன், வந்தது, வந்தாள்

விடை ஆ

44. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்ந்தெடுக்க?

குலவி குளவி குழவி

அ) சிரித்து பண்டு குடந்தை

ஆ) பார்த்து நண்டு உடந்தை

இ) நெருங்கி வண்டு குழந்தை

ஈ) தூரத்தில் தண்டு மடந்தை

விடை இ

45. ஒழுங்குபடுத்தி சொற்களை சொற்றொடராக்குக?

அ) நெல்லும் கரும்பும் கழனிக்கு அழகு

ஆ) கழனிக்கு கரும்பும் அழகு நெல்லும்

இ) கரும்பும்  அழகு நெல்லும் கழனிக்கு

ஈ) அழகு கழனிக்கு நெல்லும் கரும்பும்

விடை அ

46. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய் – மஞ்சரையே இவ்வரிகளில் அமைந்த இயைபு சொற்களைக் கண்டறிக.

அ) மையிட்டு – மிக வளர்ந்தாய்

ஆ) முப்பாலும் – மஞ்சரையே

இ) மஞ்சள் குளிப்பாட்டி – மையிட்டு

ஈ) இயைபு இல்லை

விடை ஈ

47. கீழ்க்கண்டவற்றுள் மரபுவழுவற்ற தொடர் எது?

அ) குட்டியோடு வந்த கருவன் மனிதக் குழவியை மிரட்டியது

ஆ) குருளையோடு வந்த மந்தி மனிதக்குழவியை மிரட்டியது

இ) கன்றோடு வந்த கருவன் மனிதக்குட்டியை மிரட்டியது

ஈ) குட்டியோடு வந்த மந்தி மனிதக் குழவியை மிரட்டியது

விடை ஈ



அறிவுக்கடல் பதிப்பகம்

48. ஒருமை – பன்மை பொருந்தியுள்ள தொடரை குறிப்பிடுக

அ) அன்று பார்த்தப் பெண் அவள் அன்று

ஆ) அன்று பார்த்தப் பெண் அவள் அல்லன்

இ) அன்று பார்த்தப் பெண் அவள் அல்லள்

ஈ) அன்று பார்த்தப் பெண் அவள் அல்ல

விடை இ

49. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க

அ) சாட்சி, தீர்ப்பு, நீதி, வழக்கு

ஆ) தீர்ப்பு, சாட்சி, நீதி, வழக்கு

இ) நீதி, வழக்கு, தீர்ப்பு, சாட்சி

ஈ) வழக்கு, நீதி, சாட்சி, தீர்ப்பு

விடை அ

50. வாழைக்காயின் இளமை மரபுச்சொல்

அ) வாழைக்குரும்பை

ஆ) வாழை வழு

இ) வாழைப்பிஞ்சு

ஈ) வாழைக்கச்சல்

அறிவுக்கடல் பதிப்பகம்

விடை ஈ

51. நாற்காலி என்பது என்ன?

அ) இடுகுறிப்பொதுப்பெயர்

ஆ) இடுகுறிப்பெயர்

இ) காரணப்பெயர்

ஈ) இடுகுறிச்சிறப்பு பெயர்

விடை இ

52. ஒரு சொல்லை தொடரோ இரு பொருள் தருமாறு பாடுவது எது?

அ) சிலேடை

ஆ) பள்ளு

இ) தெம்மாங்கு

ஈ) குறவஞ்சி

விடை அ

53. மீடியா என்பதன் இணையான தமிழ்ச்சொல் எது?

அ) தொலைக்காட்சி

ஆ) ஊடகம்

இ) பத்திரிக்கை



அறிவுக்கடல் பதிப்பகம்

ஈ) தினசரி

விடை ஆ

54. இலக்கணக்குறிப்பு – வெஞ்சுரம் தருக

அ) வினைத்தொகை

ஆ) அன்மொழித்தொகை

இ) பண்புத்தொகை

ஈ) உவமைத்தொகை

விடை இ

55. பிரித்தெழுதியதில் எது சரி என தேர்ந்தெடு மூவைந்தாய்

அ) மூன்று + வைந்தாய்

ஆ) மூன்று + ஐந்து + ஆய்

இ) மூ+வைந்+ தாய்

ஈ) மூன்று + வைந்து +ஆய்

விடை ஆ

56. ஓரெழுத்து ஒருமொழிக்குரிய சே என்பதன் பொருளைக் குறிப்பிடுக

அ) துன்பம்

அறிவுக்கடல் பதிப்பகம்

ஆ) மதில்

இ) நடத்தல்

ஈ) காளை

விடை ஈ

57. பெயர்சொல்லின் வகை அறிக "ஊர் உறங்கிற்று"

அ) இடவாகுபெயர்

ஆ) பொருளாகு பெயர்

இ) சினையாகுபெயர்

ஈ) கால ஆகுபெயர்

விடை அ

58. இது எவ்வகை வாக்கியம் எனத் தேர்ந்தெடு
வயலில் நேற்று ஆடுகள் மேய்ந்தில்

அ) கட்டளை வாக்கியம்

ஆ) எதிர்மறை வாக்கியம்

இ) உடன்பாட்டு வாக்கியம்

ஈ) செய்தி வாக்கியம்

விடை ஆ

அறிவுகடல் பதிப்பகம்

59. காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன் என்று பாடியவர் யார்?

அ) பாரதிதாசன்

ஆ) பாரதியார்

இ) முடியரசன்

ஈ) தாராபாரதி

விடை இ

60. எதிர்ச்சொல் எடுத்தெழுதுக – ஆடு உ

அ) தகடூஉ

ஆ) காடூஉ

இ) மாடூஉ

ஈ) மகடூஉ

விடை ஈ

அறிவுக்கடல் பதிப்பகம்

இதன் தொடர்ச்சியாக புத்தகமாக உள்ளது. மெட்டீரியல் / புத்தகம் பெற விரும்புபவர்களுக்கு இந்த எண்ணை (98651 30130) தொடர்பு கொள்ளவும்.